©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 16.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 51A] சென்னை, வியாழக்கிழமை, பிப்ரவரி 10, 2011
தை 27, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள் :** *பக்கங்கள்*

எண் 6/2011—தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டம் .. .. .. .. .. .. 2–17

எண் 7/2011—தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 19–21

எண் 8/2011—தமிழ்நாடு கடற்பகுதியில் “மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டம்” .. .. .. .. 23–24

எண் 9/2011—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் .. .. .. 25–31

எண் 10/2011—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் .. .. .. .. .. .. 33–39

**2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011.**

***தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களுக்கு இடர் உதவிகளை வழங்குவதற்கும் அவர்தம் நலன்களை உறுதி செய்வதற்கும் அவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற நலன்களை வழங்குவதற்கும் மற்றும் அவர்தம் நலனுக்காக தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நிறுமங்களை அல்லது கூட்டுறவுச் சங்கங்களை அல்லது சங்கங்களை அல்லது பிற நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நல நிதியம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களுக்கு இடர் உதவிகளை வழங்குவதற்கும் அவர்தம் நலன்களை உறுதி செய்வதற்கும் அவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற நலன்களை வழங்குவதற்கும் மற்றும் அவர்தம் நலனுக்காக தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நிறுமங்களை அல்லது கூட்டுறவுச் சங்கங்களை அல்லது பிற நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நலநிதியம் ஒன்றை அமைத்துருவாக்குவது உகந்ததாக இருப்பதாலும்,

இந்திய குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டம் மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்

**1. (1)** இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டம் எனப் பொருள்படும்.

**(2)** இது, மாநில அரசின் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்

**2.** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி, –

(a) "வாரியம்" என்றால், 10–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட வாரியம் எனப் பொருள்படும்;

(b) "நிறுமம்" என்றால், 1956–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுமம் எனப் பொருள்படும்; மையச் சட்டம் 1/1956

(c) "பங்களிப்பு" என்றால், 5–ஆம் பிரிவின்படி நிதியத்திற்குச் செலுத்தத்தக்க பணத்தொகை எனப் பொருள்படும்;

(d) "கூட்டுறவுச் சங்கம்" என்றால், 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் எனப் பொருள்படும். தமிழ்நாடு சட்டம் 30/1983

(e) "உறுப்பினராகக் கொள்ளப்பட்டவர்" என்றால், தமிழ்நாட்டிற்கு திரும்பிவந்ததன் காரணமாக உறுப்பினர் நிலை அற்று போயிருக்கிற, ஆனால் 5–ஆம் பிரிவின் **(6)**–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையின்படி நிதியத்திற்கு தொடர்ந்து பங்களிப்பினைச் செலுத்தி கொண்டிருக்கிற, தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர் அல்லது தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர் ஒருவர் என்று பொருள்படும்.

(f) "சார்ந்து வாழ்பவர்" என்றால், நிதியத்தின் உறுப்பினர் ஒருவரின் குடும்ப உறுப்பினர் எனவும், குடும்பம் ஒன்று இல்லாத நேர்வில், அந்த உறுப்பினரின் திருமணமாகாத மற்றும் வேலையில் இல்லாத சகோதரர் மற்றும் சகோதரி அல்லது விதவைச் சகோதரி எனவும் பொருள்படும்.

(g) "இயக்குநர்" என்றால், வாரியத்தின் இயக்குநர் எனப் பொருள்படும்;

(h) "குடும்பம்" என்றால்,

(i) ஆண் நபரொருவராக இருக்கும் நேர்வில், மனைவி அல்லது பெண் நபரொருவராக இருக்கும் நேர்வில் கணவர்;

(ii) இருபத்தொன்று வயது நிறைவடையாத மகன் மற்றும் சட்டப்படியாக மகவேற்பு செய்யப்பட்ட மகன் அல்லது மகள் உள்ளடங்கலாக திருமணமாகாத அல்லது விதவை மகள்;

(iii) அந்த உறுப்பினரை முழுமையாகச் சார்ந்து வாழும் தந்தை, தாய், திருமணமாகாத சகோதரி மற்றும் இளவராக உள்ள சகோதரர் மற்றும் அவ்வாறு சார்ந்து வாழ்பவர் இல்லாத நேர்வில் வயதடைந்த மகன் மற்றும் திருமணமான மகள் எனப் பொருள்படும்.

(i) "நிதியம்" என்றால், 5–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல நிதியம் எனப் பொருள்படும்;

(j) "அரசு" என்றால், மாநில அரசு எனப் பொருள்படும்;

(k) "மேலாண்மை இயக்குநர்" என்றால், வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எனப் பொருள்படும்;

(l) "உறுப்பினர்" என்றால் நிதியம் ஒன்றின் உறுப்பினர் எனப் பொருள்படும்.

(m) "தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்), தமிழர் என்றால், இந்திய கடவுச்சீட்டு ஒன்றைக்கொண்டிருக்கிற மற்றும் அயல்நாட்டின் தங்கும் இசைவனுமதிச் சீட்டுடன் வெளிநாட்டில் வேலையில் இருக்கிற அல்லது வாழ்க்கைத் தொழிலுக்காக வெளிநாட்டில் குடியிருக்கிற தமிழர் எனப் பொருள்படும்;

(n) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர் என்றால், இம்மாநிலத்திற்கு வெளியே இந்தியாவில் வேலை செய்கின்ற அல்லது குடியிருக்கின்ற தமிழர் ஒருவர் எனப் பொருள்படும்; ஆனால், மைய அரசின், மாநில அரசின், உள்ளாட்சி அமைப்பின் பணியாளர்கள் அல்லது மைய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்பேற்பு நிறுவனங்களின் அல்லது தன்னாட்சி நிறுவனங்களின் பணியாளர்களை உள்ளடக்காது.

(o) "வகுத்துரைக்கப்பட்டது" என்றால், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(p) "செயல் திட்டம்" என்றால், 3–ஆம் பிரிவின்படி அரசால் செய்யப்பட்ட தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களுக்கான நலத்திட்டம் எனப் பொருள்படும்;

(q) "தனி உதவி நிதியம்" என்றால், 9–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தனி உதவி நிதியம் எனப் பொருள்படும்;

(r) "மாநிலம்" என்றால், தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்;

(s) "தமிழர்" என்றால், இம்மாநிலத்தில் பிறந்த அல்லது இம்மாநிலத்தை வாழ்விடமாகக் கொண்ட நபரொருவர் எனப் பொருள்படும்;

**விளக்கம்:—** இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இம்மாநிலத்தை வாழ்விடமாகக் கொண்ட நபர் ஒருவர் என்றால், இம்மாநிலத்திற்கு வெளியே பிறந்து ஆனால் மூன்றாண்டுக்குக் குறையாததொரு கால அளவு ஒன்றுக்கு இம்மாநிலத்தில் தொடர்ச்சியாகக் குடியிருக்கும் நபரொருவர் எனப் பொருள்படும்;

**3.** (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, செயல் திட்டமொன்றின் மூலம் உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கு வகை செய்யலாம், மற்றும் தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களின் அல்லது தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக வகைமுறைகளைச் செய்யலாம். செயல் திட்டம்

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட செயல்திட்டமானது, இந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளுக்கு வகைசெய்யலாம்.

(3) அரசானது, வாரியத்துடன் கலந்தாய்வு செய்து, அறிவிக்கையின் வாயிலாக, மேற்சொல்லப்பட்ட செயல்திட்டத்தின் வகைமுறைகளோடு வகைமுறைகளைச் சேர்க்கலாம் அல்லது அவற்றைத் திருத்தலாம்; அல்லது அவை அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ மாற்றியமைக்கலாம் அல்லது அதனால் செய்யப்பட்ட செயல் திட்டம் எதற்கும் பதிலாக மற்றொரு செயல் திட்டத்தை அமைக்கலாம்.

செயல்திட்டம் பொருந்துவது தொடர்பான பூசல்கள்

(4) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர் அல்லது தமிழ் நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழருக்குச் செயல்திட்டம் எதுவும் பொருந்துமா என்பது குறித்து பிரச்சனை ஏதேனும் எழுமானால்; இந்தப் பொருட்பாடானது இதன் பொருட்டு வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகார அமைப்பிற்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; அந்த அதிகார அமைப்பின் முடிவே அறுதியானதாகும்.

நிதியத்திற்கான பங்களிப்பு

(5) (1) இந்தத் திட்டத்தின்படி, தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலநிதியம் என்ற பெயரிலும், முறையிலும் ஒரு நிதியமானது அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்; மற்றும் (3)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வருவாய் வழிவகை மூலங்களிலிருந்து பெறப்பட்ட பணத்தொகைகள் அனைத்தும் அத்தகைய நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) வாரியமானது, அத்தகைய நிதியத்தை தேசிய வங்கிகள் ஏதொன்றிலுமோ அல்லது தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அல்லது அரசு வழங்கும் ஏற்பளிப்புடன், வாரியத்தால், முடிவு செய்யப்படக்கூடிய பிறவங்கி எதனின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையின் கீழும் உள்ள கூட்டுறவு வங்கிகள் ஏதொன்றிலுமோ வைத்திருத்தல் வேண்டும். அத்தகையதொரு கணக்கானது வாரியத்தின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டவர்களுள் எவரேனும் இருவரால் கூட்டாக செயற்படுத்தப்படுதல் வேண்டும் அவர்களுள் ஒருவர் மேலாண்மை இயக்குநராக இருத்தல் வேண்டும்.

(3) நிதியத்திற்கு அளிக்கப்பட்ட பங்களிப்புகள் (4), (5), (6), (8), ஆகிய உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட வருவாய் வழிவகை மூலங்களிலிருந்தும் அந்த செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற வருவாய் வழிவகை மூலங்களிலிருந்தும் செய்யப்படுதல் வேண்டும்.

(4) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழராக உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு முந்நூறு ரூபாய் என்பதான தொகை ஒன்றைச் செலுத்துதல் வேண்டும் மற்றும் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து நிலையாகக் குடியேறிய அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரும், நிதியத்திற்குப் பங்களிப்பாக (6)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தொகையொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(5) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழராக உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும், மாதமொன்றுக்கு நூறு ரூபாய் என்பதான தொகை ஒன்றைச் செலுத்துதல் வேண்டும் மற்றும் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து நிலையாகக் குடியேறிய அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரும் நிதியத்திற்குப் பங்களிப்பாக (6)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகை ஒன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(6) உறுப்பினராகக் கொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் நிதியத்திற்கு பங்களிப்பாக மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாய் என்பதான தொகையொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(7) (4), (5), (6), ஆகிய உட்பிரிவுகளில் சுட்டப்பட்ட நிதியத்திற்கான பங்களிப்புகள், வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால அளவிற்குள்ளாகவும், அத்தகைய முறையிலும் நிதியத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) அரசானது, மானியத்தின் மூலம் (4), (5) ஆகிய உட்பிரிவுகளின்படி செலுத்தப்பட்ட பங்களிப்புகளின் நூற்றுக்கு இரண்டு விழுக்காட்டிற்குச் சமமானதொகையொன்றை நிதியத்திற்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் செலுத்துதல் வேண்டும்.

(9) அரசானது, வாரியத்துடன் கலந்தாய்வு செய்து, இந்தத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்குத் தேவையான தொகையைக் கருத்திற்கொண்டு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நிதியத்திற்கான பங்களிப்பு வீதங்களை அறிவிக்கையின் வாயிலாகத் திருத்தியமைக்கலாம்.

(10) நிதியத்திற்கு பின்வரும் தொகைகளும் வரவு வைக்கப்படுதல் வேண்டும் அதாவது:-

(a) இந்திய அரசாலோ அல்லது மாநில அரசாலோ அல்லது பொறுப்பேற்பு பொது நிறுவனம் அல்லது பிற நிறுவனம் அல்லது அமைப்பு எதனாலும் வழங்கப்படும் கடன்கள் அல்லது முன்பணங்கள்;

(b) தனிநபர் எவரும் அல்லது இந்தியா அல்லது வெளிநாட்டில் உள்ள அமைப்பு எதுவும் அல்லது இந்தியா அல்லது வெளிநாட்டின் அரசு முகவாண்மைகள் அல்லது பிற ஆதாரங்கள் எதிலிருந்தும் வரப்பெற்ற நன்கொடைகள்;

(c) இந்தச் சட்டத்தின்படி வசூலிக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணம், பதிவுக்கட்டணம்; அல்லது பிற கட்டணம் எதுவும்,

(d) 17–ஆம் பிரிவின்படி, வாரியத்தால் கடன்பெறப்பட்ட தொகை எதுவும்;

(e) வாரியத்தால் செய்யப்பட்ட முதலீடு அல்லது பங்கு எதனின் பேரிலான ஆதாயம் அல்லது உரித்தம் அல்லது ஈவுத்தொகை அல்லது பிறவாறு வந்தடைந்த தொகைகள் எவையும்;

(f) வகுத்துரைக்கப்படக்கூடியவாறான, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் ஏதொன்றின் படியும் உறுப்பினர்களால் கோரப்படாதத் தொகை; மற்றும்

(g) நிதியத்தின் வள ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக பிற வருவாய் வழிவகை மூலங்களின் மூலம் வாரியத்தால் சேகரிக்கப்பட்ட தொகை எதுவும்;

(11) செயல்திட்ட நிருவாகத்தின் எதிர்பாராச் செலவினம் உள்ளடங்கலாக செயல் திட்டத்தினைச் செயற்படுத்துவதுடன் தொடர்பான செலவினங்கள் அனைத்தும் நிதியத்திலிருந்து எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்.

**6.** நிதியமானது பின்வரும் அனைத்து நோக்கங்களுக்காகவுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றுக்காகவுமோ பயன்படுத்தப்படலாம், அவையாவன: நிதியத்தைப் பயன்படுத்துதல்

(a) வெளிநாட்டில் அல்லது இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் தொடர்ச்சியாக இருக்கிறவர் அல்லாத பிற உறுப்பினர்கள் அறுபது வயது நிறைவடைந்து உறுப்பினராகக் கொள்ளப்பட்டவர்கள், மற்றும் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கான பங்களிப்பைச் செலுத்தியிருந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு;

(b) ஐந்தாண்டுகளுக்கு குறையாத ஒரு கால அளவிற்கு பங்களிப்பை செய்த ஓர் உறுப்பினரின் அல்லது உறுப்பினராகக் கொள்ளப்பட்டவரின் இறப்பின் பேரில் குடும்ப ஓய்வூதியம் செலுத்துவதற்காக;

**விளக்கம்:-**

இந்தப் பிரிவின்படியான ஐந்தாண்டுக் கால அளவினைக் கணக்கிடுவதற்காக ஓர் உறுப்பினராக மற்றும் ஓர் உறுப்பினராகக் கொள்ளப்பட்ட நபரால் கொடுக்கப்பட்ட பங்களிப்புகள் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(c) நிலையான உடல் ஊனமுற்றதன் காரணமாக அல்லது இறப்பின் காரணமாக இரண்டாண்டுகளுக்கு மேற்பட்டு பணிசெய்ய இயலாமல் இருக்கின்ற உறுப்பினரால் செலுத்தப்பட்ட பங்களிப்பின் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக;

(d) நோயின் காரணமாக அல்லது விபத்தின் காரணமாக ஓர் உறுப்பினர் இறந்ததின் பேரில் நிதி உதவியை வழங்குவதற்காக;

(e) வகுத்துரைக்கப்படக்கூடியவாறு பெரும் நோயினால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவியை வழங்குவதற்காக;

(f) மகளிர் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் மகள்களுக்கான திருமண உதவியையும் மற்றும் மகளிர் உறுப்பினர்களுக்கான பேறுகாலச் சலுகைகளையும் வழங்குவதற்காக;

(g) உறுப்பினர்கள் குடியிருப்பிட வீட்டைக் கட்டுவதற்காக அல்லது நிலத்தை வாங்குவதற்காக அல்லது நிலத்தை மற்றும் கட்டிடத்தை வாங்குவதற்காக அல்லது வீட்டை பேணிவருவதற்காக அல்லது உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதிகளுக்காக நிதி உதவி அல்லது கடன்கள் அல்லது முன்பணங்கள் வழங்குவதற்காக;

(h) சுய வேலைவாய்ப்பு உதவித்தொகை வழங்குவதற்காக உறுப்பினராகக் கொள்ளப்பட்டவருக்கு சுய வேலைவாய்ப்பைத் தேடுவதற்கு உதவி அல்லது கடன்கள், வழங்குவதற்காக;

(i) தன் வாழ்க்கைத் தொழில் எதனையும் செய்வதற்கு தன்னால் தகுதியற்றவராக இருக்கும் வகையில் முழுமையான உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர் ஒருவருக்கு நிதி உதவி வழங்குவதற்காக;

(j) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அமைத்துருவாக்கப்பட்ட நிறுமம் அல்லது நிருவகம் அல்லது கூட்டுறவுச் சங்கம் எதிலுமோ அல்லது பிற சங்கம் அல்லது நிறுவனம் எதிலுமோ முதலீடு செய்வதற்காக;

(k) இந்தச் செயல்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பிற நோக்கங்களுக்காக;

உறுப்பினர் நிலை

**7. (1)** பதினெட்டு வயது நிறைவடைந்த ஆனால் ஐம்பத்தைந்து வயது நிறைவடையாத தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர் ஒவ்வொருவரும் நாட்டைவிட்டு பிறநாட்டிற்குச் சென்று குடியேறுவதற்கான தடை நீக்கம் பெறப்பட்டதன்பேரில் மாநிலத்தை விட்டுச் செல்வதற்கு முன்னதாக உடனடியாக நிதியத்தில் உறுப்பினரொருவராகத் தன்னைப் பதிவு செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவராவார்.

(2) பதினெட்டு வயது நிறைவடைந்த ஆனால் ஐம்பத்தைந்து வயது நிறைவடையாத மற்றும் மாநிலத்திற்கு வெளியே இந்தியாவில் உள்ள இடம் எதிலும் ஆறுமாதங்களுக்கு மேலாக குடியிருக்கிற தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர் ஒவ்வொருவரும், செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட முறையில் நிதியத்தின் உறுப்பினரொருவராகத் தன்னைப் பதிவுச் செய்ய உரிமைத்தகுதியுடையவராவார்.

(3) (1) அல்லது (2)—ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும் இந்தச் செயல் திட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, தமிழ்நாட்டை விட்டு நீங்கிய, தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர் அல்லது தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர் ஒவ்வொருவரும், அந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளாகவும், முறையிலும், அந்த நிதியத்தின் ஓர் உறுப்பினராக தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.

(4) ஓர் உறுப்பினரைப் பொறுத்தவரையில், பதிவுக் கட்டணமானது, இருநூறு ரூபாயாக இருத்தல் வேண்டும்;

**வரம்புரை :**ஆனால் அரசானது, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அறிவிக்கையின் வாயிலாகப் பதிவுக் கட்டணத்தை மாற்றி அமைக்கலாம்.

உறுப்பினராக இருப்பது அற்றுப்போதல்

**8.** (1) உறுப்பினர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச் செயல் எதனையும் செய்வாரானால் அல்லது பங்களிப்பினைச் செலுத்துவதற்கான செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வகைமுறை எதனையும் மீறுவாரானால், அவர் உறுப்பினராக இருப்பது உடனே அற்றுப் போகும்; மேலும் அந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வரையரைகளின் பேரில் மீண்டும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

(2) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர், மாநிலத்திற்கு வெளியேயுள்ள அவரது வேலையையோ அல்லது இருப்பிடத்தையோ விட்டு நீங்கி மாநிலத்திற்குத் திரும்புவாரானால் மற்றும் தமிழ்நாட்டிலேயே நிலையாகக் குடியிருப்பாரானால், அவர் உறுப்பினராக இருப்பது அற்றுப் போதல் வேண்டும்;

**வரம்புரை:** ஆனால், அந்த ஓர் உறுப்பினர் அறுபது வயது நிறைவெய்தும்வரை, நிதியத்திற்குத் தொடர்ந்து பங்களிப்பினைச் செலுத்துவதன் பேரில், அந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வரையரைகளின் பேரில், அந்த நிதியத்தின் ஓர் உறுப்பினராகக் கொள்ளப்பட்டவராகத் தொடர்வதற்கு உரிமைத் தகுதியுடையராதல் வேண்டும்.

(3) உறுப்பினர் அல்லது உறுப்பினராகக் கொள்ளப்பட்டவர் அரசுப்பணி அல்லது அரசுச் சார்புப்பணி எதிலும் அல்லது ஓய்வூதியம் நல்கும் பிற பணி எதிலும் சேருவாரானால், அவர் அந்தப் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து, அவர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போதல் வேண்டும்; மேலும், அவரால் இதற்கெனச் செலுத்தப்பட்ட பங்களிப்புத்தொகையைத் திரும்பப் பெறுவதற்கும் உரிமைத்தகுதி உடையராதல் வேண்டும்.

தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களுக்கான தனி உதவி நிதியம்.

**9.** (1) ஐம்பத்து ஐந்து வயது நிறைவெய்திய தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களுக்கான இந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய மருத்துவ உதவி அல்லது இன்றியமையாத பிற உதவி எதனையும் அளிப்பதற்கு, இந்தியாவிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள தனிநபர் எவரிடமிருந்தும் அல்லது கழகம் எதனிடமிருந்தும் அல்லது அரசு முகவாண்மைகளிடமிருந்து அல்லது மைய அரசிடமிருந்து அல்லது மாநில அரசுகளிடமிருந்து அல்லது மாநில அரசின் பொறுப்பேற்பு நிறுவனங்களிடமிருந்து அல்லது பிற வருவாய் வழிவகை மூலம் எதன் மூலமாகவும் பெறப்பட்ட நன்கொடைகளிலிருந்து வாரியத்தால் ஒரு தனி உதவி நிதியம் அமைத்துருவாக்கப்படலாம்.

(2) அந்தத் தனி உதவி நிதியம், வாரியத்திடம் உற்றமைந்து இருக்கும் மற்றும் வாரியத்தால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

வாரியத்தை நிறுவுதல்

**10.** (1) அரசானது, அறிவிக்கையின்வாயிலாக அந்தச் செயல் திட்டத்தைச் செயற்படுத்தி, நிருவகிப்பதற்காக "தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல வாரியம்" என அழைக்கப்படும் வாரியத்தை நிறுவுதல் வேண்டும்.

(2) வாரியமானது, நிலையான தொடர் வழிமுறையுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டு, மேற்சொன்ன பெயரால் ஒரு கூட்டுருமமாக இருந்துவரும்; மேலும் சொத்தினை ஈட்டுவதற்கும், வைத்திருப்பதற்கும், தீர்வு செய்வதற்கும், ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் அதிகாரம் கொண்டிருக்கும் மற்றும் அந்தப் பெயரில் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்.

(3) வாரியமானது, இதில் இதன் பின்பு வகை செய்யப்பட்டவாறு, அரசால் அவ்வப்போது பெயர் குறித்து நியமிக்கப்படும் பதின்மூன்று இயக்குநர்கள் அடங்கியதாயிருத்தல் வேண்டும்:-

(a) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களைச் சார்பாற்றம் செய்கிற ஐந்து இயக்குநர்கள்;

(b) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளமால் (இந்தியாவில் வாழும்) தமிழர்களைச் சார்பாற்றம் செய்கிற இரண்டு இயக்குநர்கள்;

(c) அரசைச் சார்பாற்றம் செய்கிற நான்கு இயக்குநர்கள்;

(d) அயல்நாட்டுப் பணிகளுக்கு ஆட்சேர்ப்பு வரம்பிடப்பட்ட நிறுவனத்தை சார்பாற்றம் செய்கிற ஓர் இயக்குநர்;

(e) அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகத்தைச் சார்பாற்றம் செய்கிற ஓர் இயக்குநர்;

(4) வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், அரசினைச் சார்பாற்றம் செய்கிற இயக்குநர்களுக்கிடையேயிருந்து அரசினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பெயர் குறித்து நியமனம் செய்தபின்பும், மேலாண்மை இயக்குநரை நியமித்த பின்பும், அரசானது அறிவிக்கையின் வாயிலாக, அவர் தம் பெயர்களை வெளியிடுதல் வேண்டும்.

(6) வாரியத்தின் கூட்டங்கள் மற்றும் அந்த நோக்கத்திற்காகப் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் மற்றும் அதற்குத் துணை நிறைவான அல்லது துணைமையான பொருட்பாடுகள் அனைத்தும், அரசின் ஒப்புதலளிப்பிற்குட்பட்டு, வாரியத்தாலேயே முறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) வாரியமானது, அரசின் முன் ஒப்புதலளிப்புடன், தான் பொருத்தமெனக் கருதுகிற கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, நிதியத்தை திறம்பட நிருவகித்து வருவதற்குத் தேவையெனத் தான் கருதக்கூடிய, இந்த சட்டத்தின் படியான அதிகாரங்களையும் அலுவலர் பணிகளையும் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது இயக்குநர் எவரிடமும் அல்லது வாரியத்தின் பிற அலுவலர் எவரிடமும் ஒப்படைவு செய்யலாம்.

8. அவ்வப்போது அரசினால் நிர்ணயிக்கப்படலாகிறவான ஒவ்வொரு நிதியாண்டிலும் நிதியத்திற்குச் செய்யப்பட்ட மொத்த பங்களிப்பில் நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாத ஒரு தொகையானது வாரியத்தின் அலுவலர்களுக்கும் பிற பணியாளர் தொகுதியினருக்கும் சம்பளம் வழங்குவதற்காகவும் பிற அலுவலக செலவுகளுக்காகவும் செலவு செய்யப்படலாம்; மற்றும்

9. இந்தச் சட்டத்தின்படி தன் அதிகாரங்களை செலுத்துகையில் மற்றும் அலுவற்பணிகளை ஆற்றுகையில் வாரியமானது, எழுத்துருவில் அளிக்கப்பட்ட காரணங்களுக்காக, அரசு அவ்வப்போது வழங்கக்கூடிய பணிப்புரைகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

இயக்குநர்களின் பதவிக்காலம்

**11.** (1) 10-ஆம் பிரிவின் (3)-ஆம் உட்பிரிவின்படி பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட பதவி வழி உறுப்பினர்கள் அல்லாத பிற இயக்குநர்களின் பதவிக்கால அளவானது, மூன்றாண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(2) (1)-ஆம் உட்பிரிவில் அடங்கியிருந்த போதிலும் அரசானது எந்த நேரத்திலும் எழுத்துருவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக வாரியத்தின் பதவிவழி இயக்குநர் அல்லாத பிற இயக்குநர் எவரையும் அவரது பதவியிலிருந்து அகற்றலாம். மேலும், அகற்றக் கருதப்படுவதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றை அவருக்கு கொடுத்த பின்பு அவ்வாறு அகற்றப்படலாம்;

**வரம்புரை:-** ஆனால், காரணங்களை எழுத்துருவில் பதிவு செய்வது அல்லது அத்தகைய வாய்ப்பை அளிப்பது பொது நலனுக்கு உகந்ததல்ல என அரசு கருதுமானால், அகற்றியதற்கான காரணத்தை எழுத்துருவில் பதிவு செய்வது அல்லது அகற்ற கருதப்பட்டதற்கு எதிராக காரணம் காட்டுவதற்கான வாய்ப்பு கொடுப்பது தேவையானதாக இருத்தல் கூடாது.

வாரியத்தின் அதிகாரங்களும் கடமைகளும்

**12.** (1) அந்த செயல் திட்டத்தை நிருவகிப்பதற்கு வாரியம் பொறுப்புடையதாய் இருக்கும்; மற்றும் அது அந்த செயல் திட்டத்தால் அதனிடம் வழங்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துதலும் அலுவற் பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

(2) வாரியமானது, அந்த செயல் திட்டத்தை நிர்வகிப்பதற்குத் தான் பொருத்தமென கருதக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(3) வாரியம், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளுக்குப் பின்பு, கூடிய விரைவில், அந்த ஆண்டின் மார்ச் முப்பத்தொன்றாம் நாளுடன் முடிவடைகிற முந்தைய ஆண்டின்போது, அந்த செயல் திட்டத்தின் செயற்பாடு குறித்த ஆண்டறிக்கையை அரசுக்கு பணிந்தனுப்புதல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றும், அது பெறப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டப் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தால், அந்தக் கூட்டத்தொடரிலேயோ அல்லது அறிக்கையைப் பெற்ற தேதியை அடுத்துப் பின்வருகிற கூட்டத்தொடரிலேயோ சட்டப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

தகுதிக் கேடுகளும் அகற்றுதலும்

**13.** (1) *(a)* வாரியத்தில் சம்பளம் பெறும் அலுவலராக இருக்கிற

அல்லது

*(b)* நொடிப்பு நிலையரெனத் தீர்ப்பளிக்கப்படுகிற அல்லது எந்த நேரத்திலும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற; அல்லது

*(c)* பித்தராகவோ மனச் சீர்கேடுற்றவராகவோ காணப்படுகிற; அல்லது

*(d)* ஒழுக்கச் சீர்கேட்டினை உள்ளடங்கிய குற்றச்செயல் எதற்காகவும் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்படுகிற அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற நபர் எவரும் வாரியத்தின் ஓர் இயக்குநராக தெரிந்தெடுக்கப்படுதலோ தொடர்ந்து இருத்தலோ கூடாது.

(2) அரசு, –

*(a)* (1)-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக் கேடுகளில் எதற்கும் உள்ளாகிய அல்லது உள்ளாகியிருக்கிற; அல்லது

*(b)* வாரியத்தின் மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குத் தொடர்ந்து வாரியத்தின் அனுமதியின்றி வராதிருக்கிற இயக்குநர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) (2)-ஆம் உட்பிரிவின் (a)-எனும் கூறின்படி அகற்றப்பட்ட வாரியத்தின் பதவி வழி இயக்குநர் அல்லாத பிற இயக்குநர் ஒருவர், அரசால் பிறவாறு ஆணையிடப்பட்டாலன்றி, அவ்வாறு அவர் அகற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் கால அளவுக்கு வாரியத்தின் இயக்குநராக மீண்டும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதிக் கேடுடையவராதல் வேண்டும்.

(4) (2)–ஆம் உட்பிரிவின் (b) எனும் கூறின்படி அகற்றப்பட்ட வாரியத்தின் பதவி வழி இயக்குநர் அல்லாத பிற இயக்குநர் ஒருவர், அவர் தகுதியற்றவரல்லர் என்பதாக அரசின் ஆணையொன்றின் வாயிலாக விளம்பப்படும் வரையில், மீண்டும்பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்.

இயக்குநர்கள் பதவி விலகல்

**14.** வாரியத்தின் பதவிவழி உறுப்பினர் அல்லாதபிற இயக்குநர் எவரும், எந்த நேரத்திலும், அரசுக்கு முகவரியிட்டு தன்கைப்பட எழுதுவதன் வாயிலாக தனது பதவியிலிருந்து விலகலாம் மற்றும் அவரது பதவியானது, அரசினால் அவரது பதவிவிலகல் ஏற்றுக் கொள்ளப்படுவதன் பேரில், காலியானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

காலியிடங்களை நிரப்புதல்

**15.** இறப்பு, பதவிவிலகல், தகுதிக்கேடு அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் காரணமாக அல்லது பிறவாறு காலியிடம் எதுவும் ஏற்படும் நேர்வில், வாரியமானது, அந்த நிகழ்வினை உடனடியாக அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்தக் காலியிடமானது, அந்தக் காலியிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் நிரப்பப்படுதல் வேண்டும். மேலும் அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர், அந்தக் காலியிடம் ஏற்படாதிருந்தால், எந்த இயக்குநரின் இடத்திற்கு அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டாரோ அந்த இயக்குநர் வகித்திருந்திருக்கக்கூடிய கால அளவு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய காலியிடம் எதுவும் ஏற்பட்ட போது, தொடர்கிற இயக்குநர்கள், காலியிடம் எதுவும் ஏற்பட்டிராதது போன்றே செயற்படலாம்.

அலுவலர்களையும், பணியாளர்களையும் நியமித்தல்

**16.** (1) அரசு, இந்தச் சட்டத்தின்கீழ், தனது அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், அலுவற்பணிகளை ஆற்றுவதற்காகவும், வாரியத்திற்கு உதவுவதற்குத் தான் தேவையெனக் கருதலாகும். எண்ணிக்கையில் அலுவலர்களையும், பணியாளர்களையும், வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் நியமிக்கலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்ட முறை அவர் தம் சம்பளம் மற்றும் படித்தொகைகள், ஒழுங்குக் கட்டுப்பாடு மற்றும் பிற பணி நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருக்கும்.

கடன் வாங்குவதற்கு வாரியத்திற்குள்ள அதிகாரம்.

**17.** வாரியம், அவ்வப்போது அரசின் முன் ஒப்புதலளிப்புடனும், அரசால் குறித்துரைக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், இந்தச் செயல் திட்டத்தின் நோக்கங்களுக்காக பணத்தைக் கடன் வாங்கலாம். மையச்சட்டம் 1/1956

நிறுமங்கள், கூட்டுறவு சங்கங்கள், சங்கங்கள் பிற நிறுவனங்கள் வாரியத்தால் தொடங்கப்படுதல்.

**18.** வாரியம், 1956–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்படி வரம்பிடப்பட்ட பொதுத்துறை நிறுமங்களையோ அல்லது வரம்பிடப்பட்ட தனியார் நிறுமங்களையோ 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படியான கூட்டுறவு சங்கங்களையோ அல்லது 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களைப் பதிவு செய்தல் சட்டத்தின்படி சங்கங்களையோ அல்லது பிற நிறுவனம் எதனையுமோ வாரிய உறுப்பினர்களின் அல்லது அரசின் முதலீட்டினை அல்லது பங்கினைக் கொண்டு அரசின் முன் ஒப்புதலளிப்புடன், வாரியம் அவ்வப்போது முடிவு செய்யக்கூடிய நோக்கங்களுக்காக அல்லது செயற்பாடுகளுக்காக அல்லது வணிகத்திற்காக மற்றும் வரையரைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் தொடங்கலாம். தமிழ்நாடு சட்டம் 30/1983 தமிழ்நாடு சட்டம் 27/1975

வாரியம் பொறுப்புறுதி அளிப்பவராகச் செயற்படுதல்,

**19.** வாரியமானது, இந்திய அரசின் அல்லது மாநில அரசின் ஒப்புதலளிப்புடன், வேலைக்காகச் செல்கிற தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களுக்காக, அவ்வாறு தமிழர்களிடமிருந்து, வகுத்துரைக்கப்படக்கூடிய வரையரைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், பிணைய வைப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டதன் பேரில் பொறுப்புறுதி அளிப்பவராகச் செயற்படலாம்.

கொடுபட வேண்டிய தொகையினைத் தீர்மானிப்பதற்கும் இழப்பீட்டினை வசூலிப்பதற்கும் அதிகாரம்

**20.** (1) உறுப்பினர் எவரும், ஆறு மாதங்களுக்குக் குறையாததொரு கால அளவிற்குத் தொடர்ந்து பங்களிப்பைச் செலுத்தத் தவறுவாராயின், மேலாண்மை இயக்குநர் அல்லது இதன் பொருட்டு வாரியத்தால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவரும், அவர்தம் தரப்பினை விசாரிப்பதற்கு வாய்ப்பொன்றினைக் கொடுத்த பின்பு, ஆணை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபடவேண்டிய பங்களிப்புத் தொகையினைத் தீர்மானித்து, அந்தத் தொகை எந்தக் கால அளவிற்குள் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகையானது, வாரியத்தால் குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் உறுப்பினரால் செலுத்தப்படவில்லையாயின், வாரியம், தான் பொருத்தமென நினைக்கக்கூடியவாறு, நிலுவைத் தொகையில் நூற்றுக்கு இருபத்து ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாத தொகையினை, கூடுதலாக, அவரிடமிருந்து இழப்பீடாக வசூலிக்கலாம்.

(3) அரசு, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, மேல்முறையீட்டு அதிகாரியாக, துணைச் செயலர் பதவி நிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரை நியமிக்கலாம்.

(4) 1–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையொன்றினால் குறையுற்ற நபர் எவரும், அந்த ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் 3–ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீட்டு அதிகாரியின் முன்பு மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்யலாம். மேலும் அந்த அலுவலர், தான் பொருத்தமெனக் கருதுகிறவாறான விசாரணையைச் செய்த பின்பு, அதன் பேரில் ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(5) அரசு, தானே முற்பட்டோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ மேல்முறையீட்டு அதிகாரியின் பதிவுருக்களைப் கோரிப் பெறலாம். மேலும் தேவையாகக் காணப்பட்டால், தான் பொருத்தமெனக் கருதுகிறவாறான விசாரணையைச் செய்து, மேல்முறையீட்டு அதிகாரியின் ஆணையை மாற்றியமைக்கிற சீராய்வு செய்கிற அல்லது அறவு செய்கிற ஆணைகளைப் பிறப்பிக்கலாம் அல்லது அந்தப் பொருட்பாட்டினை புதிய முடிவிற்காகத் திருப்பி அனுப்பலாம்.

**முதலாம் வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின்படி சீராய்வுக்கான ஒரு விண்ணப்பமானது, மேல்முறையீட்டு அதிகாரியின் ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

**இரண்டாம் வரம்புரை:** மேலும், அந்த ஆணையினால் பாதிக்கப்படக்கூடிய நபர் எவருக்கும் அவர்தம் தரப்பினை விசாரிப்பதற்கு வாய்ப்பொன்றினை வழங்காமல் இந்த உட்பிரிவின்படி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

வாரியத்தின் இயக்குநர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருத்தல்.

**21.** மேலாண்மை இயக்குநர் உள்ளடங்கலாக, வாரிய இயக்குநர் ஒவ்வொருவரும், மற்றும் 16–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட வாரியத்தின் பிற அலுவலர் மற்றும் பணியாளர்கள் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது செயல்திட்டம் எதனின் வகைமுறைகளில் எதனையும் ஒட்டி செயற்படும் போது அல்லது செயற்படுவதாகப் புலப்படும் போது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர் ஒருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மைய சட்டம் XLV/1860

தண்டனை

**22.** (1) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது அறிவிக்கைகள் அல்லது செயல் திட்டத்தின் வகைமுறைகளை மீறுகிற அல்லது பொய்யான விவரவுரை அல்லது தவறான முறையீடு எதனையும் வேண்டுமென்றே செய்கிற அல்லது செய்ய ஆவன செய்கிற எவரொருவரும், மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய்வரை நீடிக்கக்கூடிய பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(2) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒவ்வொன்றும், முதல் வகுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

(3) இந்த சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும், அந்தக் குற்றச்செயலாக அமைகிற பொருண்மைகள் குறித்து மேலாண்மை இயக்குநரின் முன் ஒப்புதலளிப்புடன் செய்யப்பட்ட எழுத்துருவிலான அறிக்கையொன்றின் பேரில் தவிர, நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்

**23.** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் ஏதொன்றுக்கும் எதிரான குற்றச் செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்திவருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும், அந்தக் குற்றச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால் அந்தக் குற்றச் செயலானது, தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்வதைத் தடுப்பதற்கு, தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக அத்தகைய நபர் மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், அத்தகைய குற்றச்செயல் எதுவும் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரொருவரின் இசைவுடனோ மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய இயக்குநர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலைச் செய்திருப்பதாகக்

கொள்ளப்படுதலும், அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம் :**இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

*(a)* "நிறுமம்" என்பது கூட்டுரும அமைப்பு எதுவும் எனப் பொருள்படும்; மற்றும் ஒரு பொறுப்புக்கட்டளையை, நிறுவகத்தை, ஒரு சங்கத்தை அல்லது தனிநபர்களின் பிற கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

*(b)* "இயக்குநர்" –என்பது

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, அந்த நிறுவகத்தின் ஒரு கூட்டாளி என்றும்,

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக் கட்டளை அல்லது தனிநபர்களின் பிற கழகம் தொடர்பாக, சங்கத்தின், பொறுப்புக்கட்டளையின் அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி நேர்விற்கேற்ப, சங்கத்தின், பொறுப்புக் கட்டளையின் அல்லது பிற கழகத்தின் விவகாரங்களை மேலாண்மை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிக்கிற நபர் என்று பொருள்படும்.

நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு

**24.** இந்தச்சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை அல்லது செயல் திட்டம் எதன்படியும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதற்காகவும், அரசுக்கு அல்லது வாரியத்திற்கு அல்லது வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது பிற அலுவலர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்றவழக்கு எதுவும் அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் ஆகாது.

வாரிய செயல்பாடு குறித்த விசாரணை

**25.** (1) அரசு, எந்த நேரத்திலும், வாரியத்தின் அல்லது செயல் திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்து அல்லது விசாரணை செய்து அதன் பொருட்டு அறிக்கையொன்றை அரசுக்குப் பணிந்தனுப்புவதற்காக நபர் எவரையும் நியமிக்கலாம்.

(2) வாரியமானது, அவ்வாறு நியமிக்கப்பட்ட நபருக்கு ஆய்வு அல்லது விசாரணையை முறைப்படி நடத்துவதற்கான அனைத்து வசதிகளையும் அளித்தல் வேண்டும். மேலும் அவர் கோரக்கூடிய வாரியத்தின் உடைமையிலுள்ள ஆவணங்கள், கணக்குகள் அல்லது தகவலை அவருக்கு அளித்தல் வேண்டும்.

வாரியத்தைக் கலைத்துக் கைக்கொள்ளுதல்

26. (1) அரசு, 22–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அறிக்கையைப் பரிசீலனை செய்ததன் பேரில் அல்லது பிறவாறு,—

*(a)* வாரியம், தனது அலுவற் பணிகளை ஆற்ற இயலாதிருக்கிறது; அல்லது

*(b)* வாரியம் தனது அலுவற்பணிகளை ஆற்றுவதில் தொடர்ந்து தவறுகை செய்திருக்கிறது அல்லது தனது அதிகாரங்களை வரம்பு மீறி பயன்படுத்தியிருக்கிறது அல்லது தவறாகப் பயன்படுத்தியிருக்கிறது எனக் கருதுமானால், அரசு அறிவிக்கை வாயிலாக, வாரியத்தைக் கலைத்துக் கைக்கொள்ளலாம். மேலும் அவ்வாறு கலைத்துக் கைக்கொண்ட தேதியிலிருந்து பன்னிரு மாதங்கள் என்பதான கால அளவிற்குள், வகுத்துரைக்கப்பட்ட முறையில், அதனை மீண்டும் அமைத்துருவாக்கலாம். கலைத்து கைக்கொள்ளப்படும் கால அளவானது போதிய காரணங்களுக்காக அதே போன்ற அறிவிக்கையின் வாயிலாக, ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு நீட்டிக்கப்படலாம்.

**வரம்புரை:—**ஆனால், (b) கூறில் குறிப்பிட்ட காரணங்கள் எவற்றின் பேரிலும், இந்த உட்பிரிவின்படி வாரியத்தைக் கலைத்துக் கைக்கொள்ளும் அறிவிக்கையை பிறப்பிப்பதற்கு முன்பு, அரசு, அது ஏன் கலைத்துக் கைக்கொள்ளப்படுதல் ஆகாது என்பதற்கு காரணம் காட்டுவதற்கு வாரியத்திற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்; மேலும், வாரியத்தின் விளக்கங்கள் மற்றும் மறுப்புரைகள் எவையேனும் இருப்பின் அவற்றையும் பரிசீலனை செய்தல் வேண்டும்.

2. வாரியம் கலைத்துக் கைக்கொள்ளப்பட்ட பின்பும், மீண்டும் அமைத்துருவாக்கப்படும் வரையிலும், இந்த சட்டத்தின்படியான வாரியத்தின் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் அலுவற்பணிகள், அரசால் அல்லது இந்த நோக்கத்திற்காக அரசு நியமிக்கக்கூடிய அலுவலர் அல்லது அலுவலர்களால் செலுத்தப்படுதலும், ஆற்றப்படுதலும் வேண்டும்.

3. வாரியம், கலைத்துக் கைக்கொள்ளப்படும்போது, பின்வரும் விளைவுகள் ஏற்படும், அவையாவன:-

(a) வாரியத்தின் அனைத்து இயக்குநர்களும் (1) ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தமது பதவியைக் காலி செய்தல் வேண்டும்;

(b) வாரியத்தால் செலுத்தப்படக்கூடிய அல்லது ஆற்றப்படக்கூடிய அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகள் அனைத்தும், கலைத்துக் கைக்கொள்ளப்படும் கால அளவின்போது, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடிய நபர்களால் செலுத்தப்படுதல் அல்லது ஆற்றப்படுதல் வேண்டும்.

(c) வாரியத்திடம் உற்றமைந்திருக்கும் நிதியங்கள் மற்றும் பிற சொத்து அனைத்தும், கலைத்துக் கைக்கொள்ளப்படும் கால அளவின்போது, அரசிடம் உற்றமைந்திருக்கும் மற்றும் வாரியம் மீண்டும் அமைக்கப்படுவதன்பேரில் அந்த நிதியங்களும், சொத்தும் வாரியத்திடம் மீண்டும் உற்றமைதல் வேண்டும்.

**27.** (1) வாரியம், முறையான கணக்குகளையும், தொடர்புடைய பிற பதிவுருக்களையும் பேணி வருதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்தில் ஐந்தொகைக் குறிப்பு உள்ளடங்கலான, கணக்குகளின் ஆண்டு விவர உரை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். கணக்குகள் மற்றும் தணிக்கை

(2) வாரியக் கணக்குகள், இதன்பொருட்டு அரசு நியமிக்கக்கூடிய தகுதி வாய்ந்த நபர்களால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கையர், நியாயமான எல்லா நேரங்களிலும் வாரியத்தின் கணக்குப்புத்தகங்கள் மற்றும் பிற ஆவணங்களை அணுகும் வாய்ப்பைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தணிக்கை நோக்கங்களுக்காக, தனக்குத் தேவைப்படக்கூடிய விளக்கம் மற்றும் தகவலைக் கோரிப் பெறலாம் அல்லது வாரியத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரையும் விசாரணை செய்யலாம்.

(4) தணிக்கையரால் உறுதிச் சான்றிடப்பட்ட வாரியத்தின் கணக்குகள், அதன் பேரிலான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, இதன்பொருட்டு அரசு குறித்துரைக்கக்கூடிய தேதிக்கு முன்பு, அரசுக்கு ஆண்டுதோறும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(5) வாரியம், தணிக்கையரின் அறிக்கையைப் பார்வையிட்ட பின்பு, அரசு பிறப்பிப்பதற்குப் பொருத்தமெனக் கருதுகிற பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) தணிக்கைச் செலவுகள், வாரியத்தின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**28.** உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டம் அல்லது திட்டத்தினாலோ அல்லது அதன்படியோ அரசால் அல்லது வாரியத்தால் அல்லது அரசால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் அல்லது வாரியத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மேலாண்மை இயக்குநரால் அல்லது அலுவலர் எவராலும் தீர்வு செய்யப்பட, தீர்மானிக்கப்பட அல்லது கையாளப்பட வேண்டும் என்று அல்லது தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்ட பிரச்சினை எதனையும் தீர்வு செய்வதற்கு தீர்மானிப்பதற்கு அல்லது கையாள்வதற்கு அல்லது பொருட்பாடு எதனையும் தீர்மானிப்பதற்கு அதிகார வரம்பு கொண்டிருத்தல் கூடாது. உரிமையியல் நீதிமன்ற அதிகார வரம்பிற்குத் தடை.

**29.** இந்தச் சட்டத்தின், வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்பாடு எதுவும் எழுமானால், அரசு, தறுவாயின் தேவைக்கேற்ப, ஆணையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாது, இடர்பாடுகளை அகற்றும் நோக்கத்திற்குத் தேவையானதென அல்லது உகந்ததெனத் தோன்றுகிற எதனையும் செய்யலாம். இடர்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:-**ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு, பிறப்பிக்கப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**30.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் ஏதொன்றையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (*a*) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வரும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(*b*) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வரும் என வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது பிறப்பிக்கப்படும் அறிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், சட்டப்பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்தக் கூட்டத்தொடர் முடிவுறுவதற்கு முன்பு, அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் பேரவை செய்யுமாயின், அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது எனப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன்பின்பு அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே செயல்வடிவம் கொள்ளுதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும், எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

## இணைப்புப் பட்டியல்

(3 –ஆம் பிரிவின் (2) –ஆம் உட்பிரிவைக் காணவும்)

**செயல் திட்டத்தில் வகை செய்யப்படக்கூடிய பொருட்பாடுகள்**

(1) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களை நிதிய உறுப்பினர்களாகப் பதிவு செய்தல்.

(2) நிதியத்திற்குப் பங்களிப்பு செய்யப்படவேண்டிய நேரமும் முறையும் மற்றும் பங்களிப்பானது வசூலிக்கப்படக்கூடிய மற்றும் நிதியத்தில் வைப்பீடு செய்யப்படக்கூடிய முறை.

(3) வாரியத்தின் தலைமையகம் மற்றும் வாரியத்திற்கு உதவுவதற்காக, குழுவினை அமைத்தல்.

(4) மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர்களுக்கான பயணப்படித் தொகை, தினப்படித்தொகை மற்றும் அமர்வுக்கட்டணம்.

(5) கணக்குகள் வைத்துவரப்பட வேண்டிய முறை, அரசால் குறித்துரைக்கப்படும் பணிப்புரை எதற்கும் அல்லது பிறப்பிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் இணங்கிய வகையில் நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்தல், வரவு செலவு திட்டத்தைத் தயாரித்தல், கணக்குகளைத் தணிக்கை செய்தல் மற்றும் அறிக்கைகளை அரசுக்குப் பணிந்தனுப்புதல்.

(6) நிதியங்களிலிருந்து பணம் எடுப்பது எந்த வகை நிபந்தனைகளின்படி அனுமதிக்கப்படலாம். தொகைக் குறைப்பு அல்லது தண்ட இழப்பு எதுவும் எந்த நிபந்தனைகளின்படி செய்யப்படலாம் என்பது அந்த தொகைக் குறைப்பு அல்லது தண்ட இழப்புத் தொகையின் அதிக அளவு.

(7) 6–ஆம் பிரிவின் குறித்துரைக்கப்பட்டவையல்லாத எந்த நோக்கங்களுக்காக நிதியம் பயன்படுத்தப்படக்கூடுமோ அந்த நோக்கங்கள்.

(8) ஓர் உறுப்பினர் தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் விவரங்கள் அளிக்க வேண்டிய படிவம்.

(9) ஓர் உறுப்பினரின் இறப்பின்பேரில் குடும்ப ஓய்வூதியம் எதனையும் அல்லது பிற நலன் எதனையும் பெறுவதற்கு நபர் ஒருவரை பெயர் குறித்து நியமித்தல் மற்றும் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்டதை அறவு செய்வதற்கான அல்லது மாற்றுவதற்கான நடைமுறை.

(10) உறுப்பினர்கள் குறித்த பதிவேடுகளையும் பதிவுருக்களையும் பேணிவருதல்.

(11) உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையின் படிவம் அல்லது வடிவம் மற்றும் அதனை வழங்குதல், அதன் பாதுகாப்பு மற்றும் அதனை மாற்றிக்கொடுத்தல்.

(12) இந்தச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அலுவலர்களால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்பு.

(13) நிதியத்தை நிர்வகித்துவருவதில் செய்ய நேர்ந்த செலவுத் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான நடைமுறை.

(14) நிதியத்திலிருந்து ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மானியங்கள், பிற நலன்கள் அல்லது கடன்கள் மற்றும் முன்பணங்களை வழங்குவதற்கான நடைமுறை.

(15) 18–ஆம் பிரிவின்படி உறுப்பினர்களின் நலனுக்காக வாரியத்தால் நிறுமங்கள், சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பிற நிறுவனங்கள் ஆகியவை அமைக்கப்படுவதற்கான முறை மற்றும் நடைமுறை

(16) தனி உதவி நிதியத்திலிருந்து கொடுக்கப்படக்கூடிய இன்றியமையாத பிற உதவிகள்

(17) தனி உதவி நிதியத்தின் கணக்குகளைப் பேணி வருதல், அதன் நிருவாகம் மற்றும் அதிலிருந்து உதவி வழங்குவதற்கான நடைமுறைகள்.

## நோக்க–காரண விளக்கவுரை

வரலாற்றின்படி தமிழர்கள் வணிகத்தின்பொருட்டும், படையெடுப்பின் பொருட்டும் குடியமர்வின் பொருட்டும் அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். பொருளாதார காரணங்களுக்காகவும், பொருளாதாரம் உலக மயமாக்கப்பட்டதன் காரணமாகவும், வேலைத் தேடி, அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் அயல்நாடுகளுக்கும் தொடர்ந்து இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் உலகின் பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றதன் காரணத்தால் அவர்தம் உறவினர்கள் நேர்மறையான மற்றும் எதிர்மறையான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் வேலையில் இருக்கும்போதும் அதற்குப்பின்பும் தாயகத்திலும் வெளிநாட்டிலும் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் குறித்த பிரச்சினைகளையும் சட்ட பிரச்சினைகளையும் அடிக்கடி எதிர்கொள்கின்றனர். தமிழ்நாட்டில் குறைந்த வருவாய் பெற்று வந்து, வெளிநாட்டில் வளமான எதிர்காலத்தை நோக்கி, தன்னை சார்ந்து இருப்பவர்களை இங்கு விட்டு வேலை நாடி செல்வோர், பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மேலும் அவற்றிற்கு தாங்களே தீர்வு கண்டு மீண்டும் நிலையான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள இயலாமல் இருக்கின்றனர். எனவே, தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சமூகப் பாதுகாப்பினை வழங்குவது என்பது முக்கியமாக கவனத்திற் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

2. தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் இறந்த உடல்களைத் தாயகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு தேவைப்படும் நிதியுதவி வழங்குவதோடு அதன் பின்னர் வழங்கப்படவேண்டிய கோருரிமைகளை தீர்வு செய்தலும், தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் தங்கள் குறைகளைத் தீர்ப்பதற்காகவும் நாடி, ஆதரவுடன் பொறுப்புறுதியை பெறுவதற்காகத் தொடர்பு கொள்ளுவதற்கு தமிழ்நாடு அரசின்கீழ் தனியொரு முகவாண்மை அமைப்பு இல்லாததே அவர்கள் நலத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதாக இருந்துள்ளது.

3. எனவே, அரசு, தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நலனுக்காக ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி, அதன்கீழ் ஒரு நலநிதியத்தை ஏற்படுத்தி, அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி நிருவகிப்பதற்கு ஒரு குழுமத்தையும் நிறுவக் கருதியிருக்கிறது. அரசு, இந்த நோக்கத்திற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதென முடிவு செய்துள்ளது.

4. இந்த சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு. கருணாநிதி,**

*முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவு சட்டமாக இயற்றப்படும்போது, மாநிலத் தொகு நிதியிலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், கருதப்படும் சட்டத்தின் விளைவாக எவ்வளவு செலவு ஏற்படும் என்பது குறித்து இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**மு. கருணாநிதி,**
*முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1(2), 3(1), 3(3), 4, 5(7), 5(9), 5(10), 6, 7(4), 10(1), 10(5), 16(1), 16(2), 17, 19, 20(3), 26(1), 27(1), 27(4), 29, 30(1) ஆகிய கூறுகள், அவற்றின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை பிறப்பிக்கவோ அல்லது விதிகளைச் செய்யவோ அல்லது நேர்விற்கேற்ப ஆணைகளைப் பிறப்பிக்கவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி சிறப்புத் தன்மை வாய்ந்தவையல்ல.

**மு. கருணாநிதி,**
*முதலமைச்சர்.*

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

**2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2011.**

***1949 – ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன் வடிவு***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** **(1)** இந்தச் சட்டம், 2011– ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XXVII/1949. **2.** 1949– ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் 4–ஆம் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :— 4–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**"4–A வாங்கியவருக்கு ஒப்பளிப்பு:—**

3–ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், 3–ஆம் பிரிவின் **(1)**–ஆம் உட்பிரிவின் (a)-எனும் கூறின்படி குழுவின் முன் ஒப்பளிப்பினைப் பெறாமல், வனத்தின் உரிமையாளரால் விற்கப்பட்டுள்ள அத்தகைய வனத்தை முழுவதுமாகவோ அல்லது அதன்பகுதி எதனையுமோ, வாங்கியுள்ளவர், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக, அந்த வனம் முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ இருத்தி வைத்துக் கொள்வதற்கான ஒப்பளிப்பிற்காக குழுவிடம் விண்ணப்பிக்கலாம்.

(2) குழுவானது, ஆணையின் வாயிலாக, அது தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்த விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, அவ்வனம் முழுமைக்குமான அல்லது அதன் பகுதி எதற்குமான ஒப்பளிப்பினை வழங்கலாம்.

(3) 3-ஆம் பிரிவின் **(1)**–ஆம் உட்பிரிவின் வகை முறைகளை மீறிய வகையில் அல்லாமல் பிறவாறு அத்தகைய வனத்தில், 7–ஆம் பிரிவில் சுட்டப்பட்டவாறான மீறுகைகள் ஏதொன்றுக்காகவும் குற்ற வழக்கானது தொடுக்கப்பட்டிருக்குமாயின் அல்லது எழுத்துருவில் பதிவு செய்யப்பட வேண்டிய பிற காரணம் எதற்காகவும் குழுவானது, ஒப்பளிப்பினை வழங்க மறுக்கலாம்.

(4) (3)-ஆம் உட்பிரிவின்படியான ஆணையொன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், அத்தகைய ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக, மாநில அரசுக்கு எழுத்துருவில் மேல்முறையீடு ஒன்றினைச் செய்யலாம். மாநில அரசானது, அம்மேல் முறையீட்டின் மீது அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

(5) (2)-ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட ஒப்புதலானது, 3–ஆம் பிரிவின் **(1)**–ஆம் உட்பிரிவை மீறியதற்காக உரிமையாளருக்கு எதிராக குற்றவழக்கு தொடுப்பதைத் தடுத்தல் கூடாது.

**நோக்க – காரண விளக்கவுரை**

**1949–**ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXVII /1949) **3–**ஆம் பிரிவின் **(1)–**ஆம் உட்பிரிவின்படி, வனத்தின் உரிமையாளர், வனத்தை விற்பனை செய்வதற்கு, மேற்சொன்ன சட்டத்தின் 2-A எனும் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழுவின் முன் ஒப்பளிப்பினைப் பெறுதல் வேண்டும் ; மற்றும் மேற்சொன்ன வகைமுறைகளை மீறிய வகையில் செய்யப்படும் உரிமை மாற்றம் எதுவும் இல்லாநிலையதாக ஆகிவிடும். மேற்சொன்ன சட்டத்தில் குழுவின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் வனத்தை வாங்கியவர் அவருக்கு விற்கப்பட்ட வனத்தைத் தாம் இருத்தி வைத்துக் கொள்வதற்கு, குழுவிடம் ஒப்பளிப்பிற்காக விண்ணப்பம் செய்வதற்கு வகைமுறை ஏதுமில்லை. மேற்சொன்ன குழுவின் முன் ஒப்பளிப்பு இல்லாமல், தமக்கு விற்கப்பட்ட வனத்தை இருத்தி வைத்துக் கொள்வதற்கான ஒப்பளிப்பிற்காக, வனத்தை வாங்கியவர்களிடமிருந்து பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அரசானது, மேற்சொன்ன முறையீடுகளைக் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர், வனத்தினை இருத்தி வைத்துக் கொள்வதற்கான ஒப்பளிப்பிற்காக, மேற்சொன்ன குழுவிடம் விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு வனத்தை வாங்கியவரை இயல்விப்பதற்காகவும், குழுவின் ஆணைக்கு எதிராக மாநில அரசுக்கு மேல்முறையீடு ஒன்றினைச் செய்வதற்கு அவரை இயல்விப்பதற்காகவும் வகைமுறையைச் செய்யும் வகையில் மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். செல்வராஜ்,**
*அமைச்சர் (வனம்).*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன் வடிவின் **2–**ஆம் கூறின் மூலமாக **1949** –ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் XXVII/1949) புகுத்தக் கருதப்படும் **4–**A எனும் புதிய பிரிவானது அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

***சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2011.***

***1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடற்பகுதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடற்பகுதியில் ''மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டம்'' என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/1983.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடற்பகுதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் சட்டத்தின் 3–ஆம் பிரிவில் (g) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

(g) '' இயந்திர விசை மீன்பிடிக் கலங்கள்'' என்றால், இருபது குதிரைத் திறனுக்குக் குறையாத, ஆனால் நூற்று ஐம்பது குதிரைத் திறனுக்கு மேற்படாத திறனுடைய ஓர் இயந்திரத்தைக் கொண்டதாக மற்றும் பத்து மீட்டருக்குக் குறையாத மற்றும் இருபது மீட்டருக்குக் குறைவான நீளத்தைக் கொண்டதாக உள்ளதும் உந்து விசைத்திறன் பொருத்தப்பட்டுள்ளதுமான ஒரு கப்பல் அல்லது படகு என்று பொருள்படும்; ஆனால், அது ஆழ்கடல் மீன்பிடிக் கலமொன்றை உள்ளடக்காது. மற்றும் ஆழ்கடல் மீன்பிடிக்கலம் ஒன்று என்றால் நூற்று ஐம்பது குதிரைத் திறனுக்கு மேற்பட்ட ஓர் இயந்திரத்தைக் கொண்டதாக மற்றும் இருபது மீட்டருக்கு குறையாத நீளத்தைக் கொண்டதாக உள்ளதும் உந்து விசைத் திறன் பொருத்தப்பட்டுள்ளதுமான ஒரு கப்பல் அல்லது ஒரு படகு என்று பொருள்படும்.

**நோக்க – காரண விளக்கவுரை**

தற்போது 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடற்பகுதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 3–ஆம் பிரிவின் (g) எனும் கூறில் வகை செய்யப்பட்டுள்ள பொருள் வரையறையின்கீழ் பதினைந்து மீட்டர் வரையிலான நீளம் கொண்டதாக மற்றும் பதினைந்து குதிரைத்திறனுக்குக் குறையாத ஆனால், நூற்று இருபது குதிரைத் திறனுக்கு மேற்படாத திறனுடைய ஓர் இயந்திரத்தை கொண்டதாக உள்ளதும், உந்து விசைத் திறன் பொருத்தப்பட்டுள்ளதுமான இயந்திர விசை மீன்பிடிக் கலங்கள் உள்ளடங்கியுள்ளன. மேலும், ஆழ்கடல் மீன்பிடிக்கலம் என்ற சொற்றொடரானது நூற்று இருபது குதிரைத் திறனுக்குக் குறையாத திறனுடைய ஓர் இயந்திரத்தைக் கொண்டதாக மற்றும் பதினைந்து மீட்டருக்கு குறையாத நீளத்தைக் கொண்டதாகவும் உள்ளதும், உந்து விசைத் திறன் பொருத்தப்பட்டுள்ளதுமான கலங்களை உள்ளடக்கும் வகையில் மேற்சொன்ன கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்திய அரசானது ஆழ் கடல் மீன்பிடிக்கலங்களைப் பொறுத்த அளவில், இருபது மீட்டர் மற்றும் அதற்கு மேற்பட்ட நீளம் கொண்ட மீன்பிடி கலங்களை மட்டுமே உள்ளடக்கும் வகையில் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளைப் பிறப்பித்துள்ளது.

2. இந்திய அரசினால் பிறப்பிக்கப்பட்ட திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளின் காரணமாக, அரசானது பத்து மீட்டருக்குக் குறையாத ஆனால் இருபது மீட்டருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்டதாக மற்றும் இருபது குதிரைத் திறனுக்குக் குறையாத ஆனால் நூற்று ஐம்பது குதிரைத் திறனுக்கு மேற்படாத ஓர் இயந்திரத்தைக் கொண்டதாக உள்ளதும் உந்து விசைத்திறன் பொருத்தப்பட்டுள்ளதுமான மீன்பிடிக் கலங்களை உள்ளடக்கும் வகையில் 8/1983 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 3–ஆம் பிரிவின் (g) எனும் கூறினைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது; மேலும், அதன் விளைவாக மேற்சொன்ன கூறில் “ஆழ் கடல் மீன்பிடி கலங்களுக்கான” பொருள்வரையறையை மாற்றியமைப்பதெனவும் முடிவு செய்துள்ளது.

3. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி.பி. சாமி,**
*மீன்வளத் துறை அமைச்சர்.*

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2011.**

**2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2010-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற பதினொன்றாயிரத்து எழுநூற்று எழுபத்தொரு கோடியே அறுபத்து எழு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

2010–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டப் பேரவையால் வழங்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்

(2ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 1 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 3,27,54,000 | *48,01,000* | 3,75,55,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 1,000 | *91,09,000* | 91,10,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 73,55,82,000 | *5,45,08,000* | 79,00,90,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 92,19,57,000 | ... | 92,19,57,000 |
| | | மூலதனம் | 21,83,48,000 | ... | 21,83,48,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 45,42,61,000 | *5,98,000* | 45,48,59,000 |
| | | மூலதனம் | 10,90,46,000 | ... | 10,90,46,000 |
| | | கடன் | 16,44,47,000 | ... | 16,44,47,000 |
| 6 | கால்நடை பராமரிப்பு ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 72,41,37,000 | *1,30,000* | 72,42,67,000 |
| | | மூலதனம் | 86,46,000 | ... | 86,46,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 4,22,10,000 | ... | 4,22,10,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 58,64,04,000 | ... | 58,64,04,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 29,38,36,000 | ... | 29,38,36,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 21,75,89,000 | ... | 21,75,89,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 46,11,73,000 | ... | 46,11,73,000 |
| | | மூலதனம் | 12,52,13,000 | ... | 12,52,13,000 |
| | | கடன் | 5,99,76,000 | ... | 5,99,76,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 9,41,91,000 | ... | 9,41,91,000 |
| | | மூலதனம் | 70,00,000 | ... | 70,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | 1,235,13,00,000 | ... | 1,235,13,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 24,18,96,000 | *5,69,000* | 24,24,65,000 |
| | | மூலதனம் | 7,000 | ... | 7,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 36,60,35,000 | ... | 36,60,35,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 4,49,98,000 | ... | 4,49,98,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 26,98,19,000 | ... | 26,98,19,000 |
| | | மூலதனம் | 3,70,78,000 | ... | 3,70,78,000 |
| | | கடன் | 2,60,36,000 | ... | 2,60,36,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 53,16,78,000 | ... | 53,16,78,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 548,73,82,000 | *49,47,000* | 549,23,29,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 390,39,96,000 | *25,000* | 390,40,21,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 98,36,22,000 | ... | 98,36,22,000 |
| | | மூலதனம் | 27,000 | *71,30,000* | 71,57,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 252,00,43,000 | *87,80,000* | 252,88,23,000 |
| | | மூலதனம் | 81,56,26,000 | ... | 81,56,26,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 11,000 | *91,000* | 1,02,000 |
| | | மூலதனம் | 16,26,000 | ... | 16,26,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 1,72,31,000 | *2,46,000* | 1,74,77,000 |
| | | மூலதனம் | 45,71,000 | ... | 45,71,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 15,11,24,000 | ... | 15,11,24,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 45,79,74,000 | ... | 45,79,74,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 72,36,00,000 | ... | 72,36,00,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 136,38,08,000 | ... | 136,38,08,000 |
| | | மூலதனம் | 94,53,75,000 | ... | 94,53,75,000 |
| | | கடன் | 120,66,99,000 | ... | 120,66,99,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 5,41,59,000 | ... | 5,41,59,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா— கலை மற்றும் பண்பாடு ( சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 4,21,77,000 | *7,000* | 4,21,84,000 |
| | | மூலதனம் | 5,97,32,000 | ... | 5,97,32,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 2,54,49,000 | *15,000* | 2,54,64,000 |
| | | மூலதனம் | 3,13,34,000 | ... | 3,13,34,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | வருவாய் | 273,07,81,000 | ... | 273,07,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | வருவாய் | 16,000 | *5,00,000* | 5,16,000 |
| | | மூலதனம் | 8,44,63,000 | ... | 8,44,63,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 31,48,000 | ... | 31,48,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 346,99,61,000 | ... | 346,99,61,000 |
| | | மூலதனம் | 7,000 | ... | 7,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 2,52,63,000 | *9,14,11,000* | 11,66,74,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 15,42,84,000 | ... | 15,42,84,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 47,40,93,000 | ... | 47,40,93,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 19,82,60,000 | ... | 19,82,60,000 |
| | | மூலதனம் | 15,000 | ... | 15,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 59,000 | *2,64,000* | 3,23,000 |
| | | மூலதனம் | 50,000 | *1,000* | 51,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 52,26,01,000 | ... | 52,26,01,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 551,73,59,000 | ... | 551,73,59,000 |
| | | மூலதனம் | 288,11,79,000 | ... | 288,11,79,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 1,352,24,15,000 | *12,85,000* | 1,352,37,00,000 |
| | | மூலதனம் | 3,37,41,000 | ... | 3,37,41,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 20,26,75,000 | ... | 20,26,75,000 |
| | | மூலதனம் | 66,68,000 | ... | 66,68,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 349,27,17,000 | ... | 349,27,17,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 24,28,17,000 | ... | 24,28,17,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 2,90,10,000 | ... | 2,90,10,000 |
| | | மூலதனம் | 8,89,34,000 | ... | 8,89,34,000 |
| | | கடன் | 623,49,28,000 | ... | 623,49,28,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 6,16,12,000 | ... | 6,16,12,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 2,122,61,49,000 | *3,48,31,000* | 2,126,09,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | வருவாய் | 1,203,31,07,000 | ... | 1,203,31,07,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | *கடன் செலவுகள்* | *வருவாய்* | ... | *633,99,67,000* | *633,99,67,000* |
| | | *மூலதனம்* | ... | ... | ... |
| | | *கடன்* | ... | ... | ... |
| | *பொதுக்கடன்—திருப்பிச் செலுத்துதல்* | *வருவாய்* | ... | ... | ... |
| | | *மூலதனம்* | ... | ... | ... |
| | | *கடன்* | ... | *1,000* | *1,000* |
| | **மொத்தம்** | வருவாய் | **8,488,68,44,000** | ***655,20,84,000*** | **9,143,89,28,000** |
| | | மூலதனம் | **1,780,99,93,000** | ***71,31,000*** | **1,781,71,24,000** |
| | | கடன் | **846,06,85,000** | ***1,000*** | **846,06,86,000** |
| | **பெருமொத்தம்** | | **11,115,75,22,000** | ***655,92,16,000*** | **11,771,67,38,000** |

## நோக்க—காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது –

(a) 2010– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்,

(b) அந்த ஆண்டிற்காக, மாநில தொகுநிதியத்தின்மீது *சாட்டப்பட்ட* துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**க.அன்பழகன்,**
நிதி அமைச்சர்.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2011.**

**2011–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்கான பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்ட தொகைகளை எடுப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு,

2011–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்ட சில தொகைகளை எடுத்தல்

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, 2011–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக, தமிழ்நாடு சட்டப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டின் மேற்சொன்ன பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் *சாட்டப்பட்ட* செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையான அறுபத்து நான்காயிரத்து இருநூற்று எண்பத்து ஒன்பது கோடியே எண்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகைகளை, மாநிலத் தொகுநிதியத்திலிருந்து எடுக்கலாம்.

3. தொகுநிதியத்திலிருந்து எடுக்கப்படுவதற்கு 2–ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொகைகளானவை, அந்த ஆண்டு தொடர்பாக இணைப்புப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கம்

## இணைப்புப் பட்டியல்

(2–ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 1 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 30,49,50,000 | *40,24,000* | 30,89,74,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 17,99,19,000 | *4,93,54,000* | 22,92,73,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 346,18,03,000 | *67,44,44,000* | 413,62,47,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 585,46,24,000 | *2,73,01,000* | 588,19,25,000 |
| | | மூலதனம் | 17,66,31,000 | ... | 17,66,31,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 1,347,41,62,000 | *1,000* | 1,347,41,63,000 |
| | | மூலதனம் | 113,50,05,000 | ... | 113,50,05,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 6 | கால்நடை பராமரிப்பு ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 269,08,37,000 | *1,000* | 269,08,38,000 |
| | | மூலதனம் | 9,000 | ... | 9,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 101,71,14,000 | *1,000* | 101,71,15,000 |
| | | மூலதனம் | 42,41,17,000 | ... | 42,41,17,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் ( கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 16,62,71,000 | *1,000* | 16,62,72,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 9,10,00,000 | ... | 9,10,00,000 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 309,44,19,000 | *4,000* | 309,44,23,000 |
| | | மூலதனம் | 22,75,14,000 | ... | 22,75,14,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 143,01,95,000 | *1,000* | 143,01,96,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 107,87,04,000 | *1,000* | 107,87,05,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 269,42,21,000 | *1,000* | 269,42,22,000 |
| | | மூலதனம் | 15,39,10,000 | ... | 15,39,10,000 |
| | | கடன் | 8,76,77,000 | ... | 8,76,77,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 2,645,02,38,000 | *2,000* | 2,645,02,40,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 906,41,27,000 | *1,000* | 906,41,28,000 |
| | | மூலதனம் | 390,00,00,000 | ... | 390,00,00,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 15 | சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 185,11,92,000 | *1,000* | 185,11,93,000 |
| | | மூலதனம் | 67,27,02,000 | ... | 67,27,02,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 348,94,31,000 | *4,000* | 348,94,35,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 27,44,64,000 | ... | 27,44,64,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 361,61,05,000 | *1,000* | 361,61,06,000 |
| | | மூலதனம் | 32,50,00,000 | ... | 32,50,00,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 85,02,25,000 | *1,000* | 85,02,26,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 2,911,13,10,000 | *45,56,000* | 2,911,58,66,000 |
| | | மூலதனம் | 59,58,95,000 | ... | 59,58,95,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 1,380,82,50,000 | *1,000* | 1,380,82,51,000 |
| | | மூலதனம் | 13,76,32,000 | ... | 13,76,32,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,087,69,08,000 | *6,000* | 1,087,69,14,000 |
| | | மூலதனம் | 2,286,12,62,000 | *1,000* | 2,286,12,63,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 2,079,53,17,000 | *1,18,88,000* | 2,080,72,05,000 |
| | | மூலதனம் | 101,55,23,000 | ... | 101,55,23,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 109,85,40,000 | *65,000* | 109,86,05,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 90,95,52,000 | *2,000* | 90,95,54,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 74,87,46,000 | *3,000* | 74,87,49,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 316,37,85,000 | *1,000* | 316,37,86,000 |
| | | மூலதனம் | 632,32,55,000 | ... | 632,32,55,000 |
| | | கடன் | 97,17,50,000 | ... | 97,17,50,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 761,55,92,000 | *2,000* | 761,55,94,000 |
| | | மூலதனம் | 9,69,91,000 | ... | 9,69,91,000 |
| | | கடன் | 288,31,41,000 | ... | 288,31,41,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 28,08,89,000 | *1,000* | 28,08,90,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா— கலை மற்றும் பண்பாடு ( சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 53,34,40,000 | *4,000* | 53,34,44,000 |
| | | மூலதனம் | 13,65,11,000 | ... | 13,65,11,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 48,96,93,000 | *6,51,000* | 49,03,44,000 |
| | | மூலதனம் | 5,000 | ... | 5,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | வருவாய் | 12,96,84,000 | *1,000* | 12,96,85,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | வருவாய் | 378,63,66,000 | *5,000* | 378,63,71,000 |
| | | மூலதனம் | 94,51,000 | ... | 94,51,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 9,53,54,000 | *1,000* | 9,53,55,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 3,104,01,91,000 | *1,000* | 3,104,01,92,000 |
| | | மூலதனம் | 1,495,02,07,000 | ... | 1,495,02,07,000 |
| | | கடன் | 247,69,08,000 | ... | 247,69,08,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 35,13,01,000 | *18,82,69,000* | 53,95,70,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 39,52,00,000 | *2,000* | 39,52,02,000 |
| | | மூலதனம் | 11,92,78,000 | ... | 11,92,78,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 41,88,92,000 | *1,000* | 41,88,93,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 245,19,90,000 | *6,87,000* | 245,26,77,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 125,39,83,000 | *1,000* | 125,39,84,000 |
| | | மூலதனம் | 638,84,22,000 | ... | 638,84,22,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 832,65,61,000 | *2,000* | 832,65,63,000 |
| | | மூலதனம் | 761,57,83,000 | *1,30,01,000* | 762,87,84,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 1,770,50,15,000 | *5,000* | 1,770,50,20,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 4,090,49,71,000 | *3,000* | 4,090,49,74,000 |
| | | மூலதனம் | 1,734,48,50,000 | *1,000* | 1,734,48,51,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 8,183,64,82,000 | *13,000* | 8,183,64,95,000 |
| | | மூலதனம் | 5,000 | ... | 5,000 |
| | | கடன் | 3,57,000 | ... | 3,57,000 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 82,06,43,000 | ... | 82,06,43,000 |
| | | மூலதனம் | 32,51,000 | ... | 32,51,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 1,786,45,94,000 | *2,000* | 1,786,45,96,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 17,29,76,000 | *3,000* | 17,29,79,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை ( தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 52,37,28,000 | *65,19,000* | 53,02,47,000 |
| | | மூலதனம் | 32,50,000 | ... | 32,50,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 243,53,04,000 | *1,000* | 243,53,05,000 |
| | | மூலதனம் | 81,25,01,000 | ... | 81,25,01,000 |
| | | கடன் | 89,37,50,000 | ... | 89,37,50,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 38,80,55,000 | *1,000* | 38,80,56,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 8,010,50,00,000 | *4,06,30,000* | 8,014,56,30,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 203,44,02,000 | *1,000* | 203,44,03,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 93,68,24,000 | *1,000* | 93,68,25,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) ரூ. | (4) ரூ. | (5) ரூ. |
| | *கடன் செலவுகள்* | *வருவாய்* | ... | *6,046,97,01,000* | 6,046,97,01,000 |
| | | *மூலதனம்* | ... | ... | ... |
| | | *கடன்* | ... | ... | ... |
| | *பொதுக்கடன்–திருப்பிச் செலுத்துதல்* | *வருவாய்* | ... | ... | ... |
| | | *மூலதனம்* | ... | ... | ... |
| | | *கடன்* | ... | *2,412,07,51,000* | 2,412,07,51,000 |
| | **மொத்தம்** | வருவாய் | **46,417,80,75,000** | ***6,147,81,74,000*** | **52,565,62,49,000** |
| | | மூலதனம் | **8,542,89,72,000** | ***1,30,03,000*** | **8,544,19,75,000** |
| | | கடன் | **767,90,50,000** | ***2,412,07,51,000*** | **3,179,98,01,000** |
| | **பெருமொத்தம்** | | **55,728,60,97,000** | ***8,561,19,28,000*** | **64,289,80,25,000** |

## நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது –

(a) மாநிலத்தின் மதிப்பீட்டுச் செலவினத்தைப் பொறுத்த அளவில், 2011– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக தமிழ்நாடு சட்டப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களை எதிர்கொள்வதற்கும்,

(b) அந்த ஆண்டின், மேற்சொன்ன பகுதிக்காக மேற்சொன்ன நிதியத்தின் மீது *சாட்டப்பட்ட* செலவினத்தை எதிர்கொள்வதற்கும் மேற்சொன்ன தொகையை ஒதுக்கீடு செய்வதற்கும்,

தேவைப்படும் குறிப்பிட்ட தொகைகளை மாநிலத் தொகு நிதியத்திலிருந்து எடுப்பதற்கு வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 206–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**க.அன்பழகன்,**
நிதி அமைச்சர்.

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.